**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 21-2021**

**PW-1**

**பெயர் :** அரவிந்த் கார்த்திக்

**த/பெ :** சிவக்குமார்

**தேதி :** 13.03.2024

**<u>வாதியின் தரப்பில் முதல் விசாரணை முடிக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. பிரமாணவாக்குமூலத்தில் எனது முகவரியாக குறிப்பிட்டுள்ள இடத்தில் வசித்து வருவதை காட்டுவதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிறந்த தேதி தாவாவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 05.04.1959ம் தேதிய வா.சா.ஆ.1 பாககரார் ஆவணத்தில் யாருக்கு யாருக்கு எவ்வளவு பூமி ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்தை நான் இன்றுவரையில் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எந்த சூழ்நிலையில் தயார் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்று இன்றுவரையில் யாரும் எனக்கு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி பாககரார் மூலம் ஒதுக்கப்பட்ட பூமி எந்த வகை பூமி என்றால் வானம் பார்த்த பூமி. மேற்படி பூமியின் மூலம் பெறப்படும் வருமானம் பற்றி தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் இயற்றப்பட்ட தேதியில் எனது தந்தை பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் இயற்றப்பட்ட தேதியில் எனது தந்தைக்கு 10 வயது இருக்கும். வா.சா.ஆ.2 இயற்றப்பட்ட தேதியில் 3ம் பிரதிவாதிக்கும் எவ்வளவு வயது இருக்கும் என்றால் 2 – 3 எனது தந்தைவிட குறைவாக இருக்கும். அவ்வாறு இருப்பின் எனது தந்தைக்கோ 3ம் பிரதிவாதிக்கோ தனிப்பட்ட வருமானம் இருக்கவாய்ப்பில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ 2 ஆவணத்தில் நாச்சிமுத்து கவுண்டர் கிரையம் பெற்ற பூமியை தான் சுயார்ஜிதமாக கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மூலம் ஒதுக்கப்பட்ட சொத்தையும்

வா.சா.ஆ.2 மூலம் கிரையம் பெற்ற சொத்தையும் நாச்சிமுத்து கவுண்டர் அவரது வாழ்நாளில் தனிப்பட்ட சொத்தாகதான் அனுபவித்து வந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4. நாச்சிமுத்து கவுண்டர் கடந்த 06.11.1999 தேதியிலும் அவரது மனைவி கொமரக்காள் கடந்த 15.01.1986 தேதியிலும் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் இறக்கும் வரையில் தாவா சொத்தின் வருவாய்த்துறை ஆவணங்கள் அவரின் பெயரில் தான் இருந்து வந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாச்சிமுத்து கவுண்டருக்கு பி.என்.சுப்பிரமணியம் மற்றும் பி.என். சென்னியப்பன் தான் வாரிசுகள் என்றாலும் சரிதான். தாவா சொத்தை 6ம் பிரதிவாதிக்கு விற்ற சமயத்தில் தாவா சொத்திற்கு உண்டான வருவாய்த்துறை ஆவணங்கள் மேற்படி பி.என்.சுப்பிரமணியம் மற்றும் பி.என். சென்னியப்பன் வாரிசுகள் பெயரில் இருந்து வந்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

5. தாவா சொத்தை நான் அனுபவித்து வருவதைக் காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனது தந்தைக்கும், தாயாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது 6ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தை விற்பதற்கு முன்பா அல்லது பின்பா என்றால் முன்பு தான். ஆனால், இவ்விவரத்தினை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாயாருக்கும், தந்தைக்கும் ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக வேறு எந்த வழக்கும் நிலுவையில் இல்லை. வழக்கில் எனது தாயாருக்கும், எனது தந்தைக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. தாவா சொத்து நாச்சிமுத்து கவுண்டரின் தனிப்பட்ட சொத்தாக இருப்பதால் அதில் நான் உரிமை கோரி தாக்கல் செய்வதற்கு எந்த வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தை 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தான் வருவாய்த்துறை ஆவணங்களில் தங்கள் பெயரை மாற்றம் செய்து உபயோகித்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு 1ம் பிரதிவாதியுடன் பேச்சுவார்த்தை இல்லை. 1–4

பிரதிவாதிகளுடன் ஒன்றுசேர்ந்து கொண்டு அவர்கள் தூண்டுதலின் பேரில் இல்லாத உரிமையை இருப்பதாக காட்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 7, 8 பிரதிவாதிகளுக்கு கொடுத்த கிரையப்பத்திரத்தினை பொறுத்து எந்தவொரு பரிகாரமும் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் கூட்டுசுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ள தாவா மதிப்பீடு தவறு என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.03.13 20:32:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.